**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP 204/2023**

2023 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் நாள் வியாழன்கிழமை

ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அலமேலுமங்கை | க/பெ.: | பவுஜில்ராஜா |
| கிராமம்: | காந்தி நகர், பழைய பேட்டை | தாலுக்கா: | திருநெல்வேலி |
| மதம்: | இந்து | தொழில்: | உதவிப் பேராசிரியை (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்) |
| வயது: | 46 | முகவரி: | பிளாட் எண். 19, பிக்னிக் சிட்டி, காந்தி நகர், பழைய பேட்டை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 23.11..2023

**ம.சா.1ன் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. எனவே மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 02.05.2015 | முதல் தகவல் அறிக்கை - உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 02.05.2015 | காயச்சான்று - நகல் |
| ம.சா.ஆ.3 | 27.05.2017 | வாகன ஆய்வறிக்கை வேண்டி காவல் துறைக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - (TN -31 AJ 6798 ) - உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 | 30.05.2017 | ஒப்புதல் அஞ்சல் அட்டை - அசல் |
| ம.சா.ஆ.5 | 14.05.2015 | வாகன ஆய்வறிக்கை (TN 04 J 9393) - நகல் |
| ம.சா.ஆ.6 | 14.05.2015 | வாகன ஆய்வறிக்கை (TN 10 E 2265) - நகல் |
| ம.சா.ஆ.7 | 26.07.2014 | காப்பீட்டு நகல் (TN -31 AJ 6798 ) - நகல் |
| ம.சா.ஆ.8 | 30.01.2015 | காப்பீட்டு நகல் (TN 04 J 9393) - நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.9 | -- | வருமான வரி குறிப்புகள் - நகல் (2ம்எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| ம.சா.ஆ.10 | -- | நான்கு சக்கர வாகனமான டேங்கர் லாரி ஆர்.சி. புக் (TN -31 AJ 6798 ) - நகல் |
| ம.சா.ஆ.11 | -- | மருத்துவ செலவினங்கள் - 34 எண்ணிக்கை ரூ. 1,67,847/- அசல் (2ம்எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| ம.சா.ஆ.12 | -- | டிஸ்சார்ஜ் சம்மரி - நகல் (2ம்எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| ம.சா.ஆ.13 | -- | கல்லூரி அடையாள அட்டை - நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

எனது வருமானம் குறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தானது 02.05.2015 ம் தேதியன்று அதிகாலை 1.00 மணியளவில் இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த நேரத்தில் ஒரே இருட்டாக இருந்தது. விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் TN 10 E 2265) என்ற காரில் பயணம் செய்தேன். ரிப்பேர் ஆன காரை இழுத்துச் சென்ற காரில் தான் நான் பயணம் செய்தேன். அதில் தான் விபத்து ஏற்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் பழுதான காரை இழுத்துச் சென்ற காரின் கயிறு அறுந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது என்று முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் செல்லும் கார்கள் குறிப்பிட்ட இடத்தில் தான் நிற்கவேண்டும் என்ற சாலை விதி உள்ளது என்றால் சரிதான். நான் பயணம் செய்த வாகன ஒட்டுநர் அதை கடைபிடிக்காமல் நடுரோட்டில் நிறுத்தியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சாலை ஒரமாக காரை நிறுத்தி இருந்தேன் என்பதற்காக ஆதரவாக புகைப்படமோ, பார்வை மகஜரோ, மாதிரி வரைபடமோ தாக்கல் செய்யவில்லை. விபத்தை ஏற்படுத்திய லாரியின் ஒட்டுநர் வாகன ஆய்வு அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கயிறு அறுந்ததாலோ, வேறு வாகனத்திலோ இந்த விபத்து ஏற்பட்டது என்றும், அதனை மறைக்கத்தான் லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் 3 வாகன சம்பந்தப்பட்டதாகவும், அதில் மற்ற 2 வாகனங்களில் உரிமையாளர்களையும், காப்பீட்டு நிறுவனங்களையும் இம்மனுவில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தது 2015ம் வருடம் என்றும், சிகிச்சை

எடுத்துக்கொண்டுள்ளதால் காயங்கள் குணமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தற்போதும் இன்னொ ரு அறுவை சிகிச்சை செய்யவேண்டியுள்ளது. இழப்பீடு அதிகம் பெற வேண்டும் என்பதற்காக காயத்தின் தன்மையை மிகைப்படுத்தி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு கனரக வாகனத்தை ஓட்டுவதற்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. இழப்பீடு கொடுக்க வேண்டியிருந்தால் 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நாங்கள் பயணித்த கார் நடுரோட்டில் நிறுத்தியிருந்ததால் இந்த வாகன விபத்து ஏற்பட்டது என்றும், இந்த வாகன விபத்திற்கு எங்களது ஓட்டுநர் தான் காரணம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்.கே.சக்திவேல்,
சார்பு நீதிபதி,
திருத்துறைப்பூண்டி.